**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No: CC.213/2022**
**Prosecution Witnesses : 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : **சதிஸ்குமார்** | Caste | : |
| Father 's Name / Husband Name | : **ரவிசந்திரன்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர்)
**(09.03.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது பல்லாக்கபுதுப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் தனியார் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். கடந்த 31.01.2017ம் தேதி இரவு 8.30 மணிக்கு எனது அப்பா ரவிசந்திரனுக்கு விபத்து ஏற்பட்டதாக தகவல் கிடைத்தது. நான் சம்பவம் நடந்த மூலக்கரை சிவன் கோவிலுக்கு சென்று பார்த்த போது ஆம்புலன்சில் காயம்பட்டவர்களை ஏற்றிக் கொண்டிருந்தார்கள். நான் ஆம்புலன்சில் ஏறி எனது அப்பா ரவிசந்திரன் உடனே சென்றேன். திருமங்கலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார்கள். அங்கு முதல் உதவி செய்துவிட்டு மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தார்கள். அங்கு சிகிச்சை பலனின்றி எனது அப்பா ரவிசந்திரன் இறந்துவிட்டார். விபத்தானது ஆட்டோ கவிழ்ந்து விபத்து ஏற்பட்டதாக தெரிந்துகொண்டேன். அந்த ஆட்டோவை ஜெயபிரகாஷ் என்பவர் ஓட்டி வந்ததாக தெரிந்துகொண்டேன். பின்பு சம்பவம் தொடர்பாக காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். புகார்மனுவில் உள்ள

கையெழுத்தும் என்னுடையது தான். **அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ஆஜர் எதிரி தான் ஆட்டோவை சம்பவ தினத்தன்று ஓட்டி வந்தார் என்று கேள்விபட்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் கு.வி.**

சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அதே போல் விபத்து எப்படி ஏற்பட்டது என்றும் விபத்து ஏற்படுத்திய வாகனத்தை யார் ஓட்டி வந்தார்கள் என்றால் தெரியாது. விபத்து நடந்ததாக சொல்லப்படும் இடமானது கீழஉரப்பனுர் சிவன்கோவில் அருகில் என்றால் சரிதான். விபத்து நடந்தயிடமானது சிவன்கோவில் கண்மாய் கரையிலிருந்து இறக்கமான பகுதி என்றால் சரிதான். இறக்கமான பகுதிக்கு அருகே ஒரு வளைவான பகுதி என்றால் சரிதான். அந்த விபத்தானது அந்த வளைவு பகுதியில் ஏற்பட்டது என்றால் சரிதான். கண்மாய்க் கரையின் இறக்கம் மற்றும் வளைவான ரோட்டில் திடிரென நாய் குறுக்கே சென்றால் அதன் ஓட்டுனர் பிரேக் பிடிக்கும் போது நிலை தடுமாறி விழவாய்ப்புள்ளது என்றால் சரிதான். எனது தகப்பனரான விபத்தில் இறந்தவருக்கு மது குடிக்கும் பழக்கம் உண்டு என்றால் சரிதான். விபத்து நடந்த அன்று எனது தகப்பனாரின் பேண்ட் பையில் மது பாட்டில் வைத்திருந்தார் என்றால் தெரியாது. அன்று மது அருந்தியுள்ளாரா என்றால் தெரியாது. நான் சம்பவயிடத்திற்கு சென்றபோது ஓட்டுனர் வாகனத்தை நிறுத்துவதற்கான டயர் தடம் ஏதும் இருந்ததா என்றால் கவனிக்கவில்லை. நான் சென்று பார்த்த போது எனது அப்பாவை மட்டும் தான் பார்த்தேன். நான் கொடுத்த புகாரானது என்னால் எழுதப்பட்டது என்றால் சரிதான். அதில் உள்ள விபரங்கள் அனைத்தும் காவல் நிலையத்தார்கள் சொன்னார்களா என்றால் நான் தான் எழுதினேன். எனக்கு சம்பவம் பற்றி நேரடியாக தெரியாது என்றாலும் இறந்தவர் எனது தகப்பனார் என்பதாலும் வழக்கிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No: CC.213/2022**
**Prosecution Witnesses : 2**

| | | | |
|---|---|---|---|
| Name | : **சாந்தி** | Caste | : |
| Father 's Name / Husband Name | : **ரவிசந்திரன்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர்)
**(09.03.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது பல்லாக்கபுதுப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 2017ம் வருடம் தேதி சரியாக ஞாபகம் இல்லை. மருத்துவமனை சென்று பார்த்த போது தான் விபத்து ஏற்பட்டு எனது கணவர் ரவிசந்திரனுக்கு காயம் ஏற்பட்டு இருந்த விபரங்கள் தெரிந்து கொண்டேன். விபத்து எவ்வாறு நடந்தது என்று எனக்கு தெரியாது. ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசுதரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக கோரப்பட்டு அனுமதி அளித்ததின் பேரில் கு.வி**

கடந்த 31.01.2017ம் தேதி இரவு 8.30 மணிக்கு TN 58 A 1365 பதிவு எண் கொண்ட சேர் ஆட்டோவில் செக்காணூரணில் இருந்து பல்லாக்காபட்டிக்கு எனது கணவர் ரவிசந்திரன் வந்துகொண்டிருந்த போது மேலஉரப்பனூர் மூலைக்கரை சிவன்கோவில் அருகே ஆட்டோவை ஆஜர் எதிரி அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டி ஆட்டோவினை கவிழ்த்து விபத்து ஏற்படுத்தியதில் ரவிசந்திரனுக்கு வயிற்றில்

இரத்தக்காயமும் கால்களில் சிராய்ப்பு காயமும் ஏற்பட்டு கீழே கிடந்தவரை 108 ஆம்புலன்சு மூலம் திருமங்கலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தார்கள் என்றும் அங்கு இருந்து மேல்சிகிச்சைக்காக அரசு ராஜாஜி மருத்துவமனையில் சேர்த்தார்கள் என்றும் சிகிச்சை பலனின்றி அவர் இறந்துவிட்டார் என்றும் போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.** இல்லை